ஸ்ரீ :
ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமத் வரவரமுநயே நம:
ஸ்ரீமத் வரத குரவே நம:

## பெரிய திருமலை நம்பி - வைகாசி - ஸ்வாதி

### தனியன்

ஸ்ரீமல் லசஷ்மண யோகீந்த்ர ஸ்ரீராமாயண தேஸிகம் |
ஸ்ரீஸைலபூர்ணம் விருஷப ஸ்வாதி ஸஞ்ஜாத மாஸ்ரயே ||

திருஅவதாரஸ்தலம் - திருமலை
திருநாமம் - ஸ்ரீசைலபூர்ணர், பெரியதிருமலை நம்பி
ஆசாரியன் - ஆளவந்தார்
சிஷ்யர் - எம்பெருமானார்
திருக்குமாரர் - பிள்ளை திருமலைநம்பி, இராமானுஜன்
மகள் - அலர்மேல் மங்கை

இவர் நித்யசூரிகளில் ஒருவரான `சுமுகர்' அம்சமாக அவதரித்தார். இவர் திருவேங்கடமுடையானுக்கு தினமும் பாபாநாசத்திலிருந்து திருமஞ்ன தீர்த்தம் கொண்டு வந்து கைங்கர்யம் செய்து வந்தார். இவர் தன்னுடைய முதல் சகோதரியை ஸ்ரீபெரும்பூதுார் ஆசூரி வம்சத்தாரான கேசவ சோமயாஜி என்பவருக்கும், இரண்டாவது சகோதரியை மதுரமங்கலம் கமல நயநபட்டருக்கும் திருக்கல்யாணம் செற்து வைத்தார். பெரிய திருமலை நம்பி தன் மகள் அலர்மேல் மங்கையை அலங்கார வேங்கடவர்க்கு (அருளாளப்பெருமாள் எம்பெருமானாரின் திருக்குமாரர்) திருக்கல்யாணம் செய்து வைத்தார்.

முதல் சகோதரியின் மகனுக்கு இளையாழ்வார் என்றும், இரண்டாவது சகோதரியின் முதல் மகனுக்கு கோவிந்தர் (பின்னர் எம்பார் என்று அழைக்கப்பட்டார்) என்றும், இரண்டாவது மகனுக்கு சிறிய கோவிந்தர் என்றும், இவர் பேரக்குழந்தைக்கு தாதாச்சாரியர் (அலங்கார வேங்கடவர் குமாரர்) என்றும் பெயர்.

### திருமலைநம்பி அருளியுள்ள அமலனாதிபிரான் தனியன்

காட்டவே கண்ட பாத கமலம் நல்வாடை உந்தி
தேட்டரும் உதரபந்தம் திருமார்பு கண்டம் செவ்வாய்
வாட்டமில் கண்கள் மேனி முனி ஏறித் தனிபுகுந்து
பாட்டினால் கண்டு வாழும் பாணர் தாள் பரவினோமே.

## திருமலை நம்பியின் பணிவு

இராமானுஜர் திருமலைக்கு எழுந்தருளினபோது, நம்பி அவரை பூர்ண கும்பத்துடனும், சகல மரியாதைகளுடனும் எதிர் கொண்டழைத்தார். `பெரியவரான தேவரீர் இதற்காக வந்தது சரியோ, சிறியவர் யாரையாவது அனுப்பியிருக்கக்கூடாதோ' என்று இராமானுஜர் கேட்க, அதற்கு நம்பிகள் `திருமலையில் அடியேனை விடச் சிறியவர்கள் யாருமில்லை' என்று விநயத்தோடு பதில் அளித்தார்.

## பெரியதிருமலை நம்பிகள் செய்த கைங்கர்யங்கள்

1) பெரிய திருமலை நம்பிகள் சைவராக மாறிய கோவிந்த பட்டரை (எம்பாரை) காளஹஸ்தி சென்று திருத்திப் பணிகொண்டு ஸ்ரீவைஷ்ணவராக்கினார்.

2) இவர் இராமானுஜருக்கு கீழ்திருப்பதியில் ஒருவருட காலம் இராமாயணத்தின் அர்த்த விசேஷங்களைச் சொன்னார். இராமாயண காலசேஷபம் முடிந்த பிறகு இராமானுஜரின் வேண்டுகோளின்படி, கோவிந்த பட்டரையும் அவருடன் சேர்த்து அனுப்பினார்.

3) இவர் தம்முடைய இரு குமாரர்கள், பிள்ளை திருமலைநம்பியையும் இராமானுஜனையும் எம்பெருமானாரிடத்தில் ஆச்ரியக்கச் செய்தார். இவர்கள் இருவரும் எம்பெருமானார் ஏற்படுத்திய 74 சிம்மாசனாதிகளில் இடம் பெற்று இருந்தனர்.

## வாழித்திருநாமம்

வைகாசிச் சோதிநாள் வந்துதித்தான் வாழியே
வண்திருவேங்கடமுடையான் வரபுத்திரன் வாழியே
அய்யன் ஸ்ரீஆளவந்தார் அடிதொழுவோன் வாழியே
அனவரதம் மலைகுனியர்க்கு அடிமைசெய்வோன் வாழியே
மெய்யனிரமானுஜசாரியன் விரும்புமவன் வாழியே
மிக்க திருமலையார்க்கெல்லாம் மேலாவான் வாழியே
செய்ய தமிழ் வேதத்தின் சிறப்பறிந்தோன் வாழியே
திருமலைநம்பிகள் உபய திருவடிகள் வாழியே.

பெரிய திருமலை நம்பி திருவடிகளே சரணம்

வாசிக தோஷ: சஷந்தவ்ய: